நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## CC. No. 21/2025

## P.W.2 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜு |
| தந்தை / கணவர் பெயர் | : | மாது |
| கிராமம் | : | மேட்டுர் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | மேட்டுர் |
| சாட்சி வரிசை எண் | : | PW2 |
| வயது | : | 48 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2026–ஆம் வருடம்,மே மாதம், 11–ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர். அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 03.50 PM

1. நான் தற்போது மேட்டுர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.10.2024 ம் தேதி ஆய்வாளர் அவர்களுடன் காலை 08.30 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் ரவிச்சந்திரன், நானும் தலைமை காவலர் முருகன் அவர்களும் மதுவிலக்கு குற்றம் சம்மந்தமாக மேட்டுர் காவல் நிலைய

சரகம், ஆண்டிகவுண்டன்நகர், சரோஜா தியேட்டர் அருகே சென்றபோது TN 33 BH 8967 என்ற டிவிஎஸ் வண்டியை சுற்றியிருந்தவர்கள் போலீசார் ஆகிய எங்களை கண்டதும் கலைந்து சென்றனர்.

2. மேற்படி வண்டியுடன் சந்தேகத்திற்கு இடமாக நின்றுக்கொண்டிருந்த நபரை பிடித்து விசாரிக்க தனது பெயரை முன்னுக்கு பின்முரணாக கூறி இறுதியில் தனது பெயர் ராஜமாணிக்கம் தந்தை பெயர் மணிவேல், EB கோட்டர்ஸ் மேட்டூர் என்றும் சொன்னார். சந்தேகத்தின்பேரில் மேற்படி வண்டியின் பெட்டியை திறக்க சொல்லி பார்த்தபோது அதில் அரசு மதுபானம் 180 மிலி அளவுள்ள Black Pearl –26 பாட்டில்கள் இருந்தது.

3. இதைப்பற்றி ராஜமாணிக்கத்திடம் விசாரிக்க அரசின் அனுமதியோ உரிமமோ இல்லாமல் சொற்ப இலாபத்திற்காக விற்பனைக்கு வைத்திருக்கும் குற்றத்தை ஒப்புக்கொண்டார். மேற்படி நபரை குற்றத்திற்கான காரணத்தை கூறி காலை 08.45 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் கைதுசெய்தார். மேற்படி வாகனம் அதில் கைப்பற்றப்பட்ட மதுபானத்தை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்ற தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் என் முன்னிலையிலும் தலைமை காவலர் முருகன் முன்னிலையிலும் காலை 09.00 மணிக்கு கைப்பற்றினார்.

4. மேற்படி கைப்பற்றுதல் மகசரில் நானும், தலைமை காவலர் முருகன் என்பவரும் காவல் நிலையம் வந்து கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரிலுள்ள 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த கைப்பற்றுதல் மகசர் ஏற்கனவே அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.)** மேற்படி நபர் கைப்பற்றப்பட்ட வாகனம், கைப்பற்றப்பட்ட மதுபானங்களுடன் காலை 09.45 மணிக்கு நிலையம் வந்து மேற்படி நபர் மீது மேட்டூர் காவல் நிலைய குற்ற எண். 189/2024 , ச.பி. 4(1)(C ) TNP Act ன் கீழ் வழக்கு பதிவுசெய்தார். இதற்கு நாங்கள் உதவியாக இருந்தோம். காவல் உதவி ஆய்வாளர் இதுசம்மந்தமாக என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சரோஜா தியேட்டர் பகுதி ஆள்நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரியல்ல. உதவி ஆய்வாளர் அழைத்ததன் பேரில் நாங்கள் வழக்கமான ரோந்துப்பணிக்காக சென்றோம். நாங்கள் சம்பவயிடம் சென்றபோது TN 33 BH 8967 என்ற வாகனத்தை சுற்றி சுமார் 5-10 நபர்கள் இருந்திருப்பார்கள். மேற்படி நபர்கள் யார்யார் என்று எனக்கு தெரியாது.

2. சம்பவயிடத்தில் சுமார் கால்மணிநேரம் இருந்திருப்போம். கைப்பற்றுதல் மகசர் சம்பவயிடத்தில் வைத்து காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்தார்.காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட கைப்பற்றுதல் மகசரில் காவல் நிலையத்தில்வைத்து கையெழுத்து செய்தேன்.

5. நாங்கள் ரோந்துக்கு செல்லும்போது கம்யூட்டர் மற்றும் பிரிண்டரை எடுத்து செல்லவில்லை. சம்பவம் சமயத்தில் எதிரி ஊர்காவல் படையில் பாதுகாப்பு போலீசாக வேலை பார்த்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. வழக்கிற்காக நான் அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்து, வழக்கின் சம்மந்தப்பட்ட இருச்சக்கர வாகனம் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரியிடம் இருந்தது. உதவி ஆய்வாளருக்குதான் தெரியும். 26 பாட்டில்கள் அரை சாக்குபை நிறையும் அளவிற்கு வரும். நான் சொன்னவாறு 26 பாட்டில்களை டிவிஎஸ் 50 இருச்சக்கர வாகனத்தின் பெட்டியில் வைக்கமுடியாது என்றால் சரியல்ல.

6. எதிரியிடம் மதுபானம் அதிக விலைக்கு வாங்கிய நபர்களை நாங்கள் விசாரிக்கவில்லை. ஒரு நபரை கைதுசெய்ய வேண்டுமெனில் அந்த பகுதியில் உள்ள மதிப்பு மிகுந்த நபரை சாட்சியாக வைத்துதான் கைதுசெய்யவேண்டும் என்றால் சரிதான். பொதுமக்கள் யாரும் முன்வராததால் அவ்வாறு செய்யவில்லை.

7. நான் சொன்னவாறு கைப்பற்றுதல் மகசர் சம்பவயிடத்தில் வைத்து தயார் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு தயார் செய்திருந்தால் பொதுமக்களை சாட்சிகளாக வைத்து தயார் செய்திருப்போம் என்றால் சரியல்ல.

8. உண்மையில் நான் சம்பவயிடம் போகவில்லை என்றாலும் எதிரி ஊர்காவல் படையில் இதே காவல் நிலைய எல்லைக்குள் பணிபுரிந்து வருகிறார் என்றாலும் அவர்மீது உள்ள கால்புணர்ச்சியால் இந்த பொய் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. புள்ளிவிவரக்கணக்கிற்காக இவ்வழக்கு எதிரிமீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:- 04.00 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/-நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**